முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 956

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.05.2022, வியாழக்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா
அண்ணலாக வாழும் தேசிகா
மாறுதலை செய்தே தீருவேன் என
மகத்துவம் பட என் சக்தி கூட்டி வந்த குருராஜா
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர் யானும் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 29 ம் நாள், 12.05.2022 வியாழக்கிழமை)
வரமென அரங்கன் தர்மம் வளரவளர
வையகம் பாதுகாப்பும் வளர்ச்சியும் பெறும்
3. தரமான அரங்கன் சன்மார்க்கம் எங்கும் பரவபரவ
தரணியோர் ஞானவான்களாக சிறக்க நேரும்
நேர்மைகொண்ட அரங்கன் பாதையை
நிலவுலகம் பின்பற்ற ஆரம்பித்துவிட்டால்
4. வறுமை விலகும் உலகம் பேரிடரில்
இருந்து பாதுகாப்பை பெறும்
காப்புதரும் மகா சக்திஅரங்கனே
கலி இடரை வெல்லும் ஒரே தவசி குருராஜனே
5. அரசனே நீயே மக்களை காக்கும் மீட்கும் என் அவதார மகா சக்தி
பெருமைகொண்டு உன் மார்க்கத்தை
பிசகின்றி எந்த தேசம் ஏற்கின்றதோ அந்த தேசமெல்லாம் யுத்தம் கலகம் வறுமை
பேரிடர் என்கின்ற துன்பம் ஏதுமில்லாத
6. கருணை இயற்கை வளம்
பொருள்வளம் புண்ணியபலம் என
ஞானத்தலைமை என ஆற்றல் மிகுபட
உயர்ந்து சிறந்து எல்லா வளமும் காணும்
7. காணவே அரங்கன் உன் வழி
கந்தவேலன் யான் அற்புதம் நடத்துகின்றேன்
ஞானமென எவர் உன்னை நம்பி ஞானவழிகளை தொடர்கின்றாரோ அவர்களெல்லாம்
ஞான சித்தி கண்டு உயர நேரும் ஞானி உன் திருவடி பற்றி

8. நற்காரியங்களான தானதர்மத்தை எவர்கைக்கொள்கின்றாரோ
அவர்களெல்லாம் கலியில் ஞானவான்களாக
தேர்வுசெய்யப்பட்டு ஞான ஆட்சிக்காலங்களில் நல்ல பதவியும்
நல்ல வாய்ப்பும் யோகமும் சிறப்பும் கண்டு உயர நேரும்

9. பெருமைபட அரங்கனுள் யானிருக்க
பிரணவக்குடில் நாடி உன்னை சேவிக்கும் அனைவருக்கும்
ஆறுமுகன் என் அருளும்
ஆசியும் தயவும் உண்டுஉண்டு
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–